தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நம்முடைய மாநிலத்தினுடைய பல்வேறு பகுதிகளில் புதிதாகக் குடும்ப அட்டைக்கு மனு செய்கின்றபோது, அரிசி வேண்டாம் என்று எழுதிக் கொடுங்கள் என்று அதிகாரிகள் ஒரு நிபந்தனை வைக்கின்றார்கள். மாநில அரசு அப்படி ஏதாவது ஒரு வழிகாட்டுதல் சொல்லி இருக்கிறதா? அப்படி இருந்தால், அதைத் திரும்ப பெற்று அரிசி கிடைப்பதற்கு வழிவகை செய்யக்கூடிய அளவிலே அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எந்தவிதமான நிபந்தனையும் விதிக்கவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அரிசி வேண்டாம் என்று கூறினால்தான் குடும்ப அட்டைகள் வழங்கப்படும் என்ற நிலையில்லை. யாருக்கு வேண்டுமானாலும், குடும்ப அட்டைகள் தேவைப்படுகிறவர்களுக்கு இப்போது இந்த அரசு குடும்ப அட்டைகள் தந்து கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 386, திரு. எம். சக்திவேல் முருகன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

386—

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல்

***9095—திரு. எம். சக்திவேல் முருகன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் பேரூராட்சி 21 வார்டுகளில் 14 வார்டுகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்காமல் நேரடி நீர் வழங்குவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஊர்க்காடு குடிநீர்த் திட்டம் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் உள்ளதா?

2003 மே 5]

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அம்பாசமுத்திரம் பேரூராட்சிக்கு ஊர்க்காடு, கோடரங்குளம் திட்டம் மூலமாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-25

திரு. எம். சக்திவேல் முருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள எந்நாளும் வற்றாத ஜீவநதியான தாமிரபரணி உற்பத்தியாகின்ற இடத்தில் எனது தொகுதியான அம்பாசமுத்திரம் இருக்கிறது. அந்த அம்பாசமுத்திரம் பகுதியிலுள்ள பேரூராட்சியிலிருந்துதான் இன்று பல்வேறு பகுதிகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர், பெரிய பெரிய குழாய்கள் போட்டு, அம்பாசமுத்திரம் பேரூராட்சிப் பகுதியிலுள்ள சாலைகள் வழியாகச் சென்று கொண்டு இருக்கின்றது. ஆனால் இங்கே அமைச்சர் அவர்கள் ஊர்க்காடு பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்தின் மூலமாகவும், கோடரங்குளத்தின் மூலமாகவும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிக்கொண்டிருப்பதாகக் கூறினார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்வது, ஊர்க்காடு பகுதியிலிருந்து அம்பாசமுத்திரம் பேரூராட்சியிலுள்ள 7 வார்டுகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுக் கொண்டிருப்பது உண்மை. ஆனால் அம்பாசமுத்திரம் பேரூராட்சியிலுள்ள மீதியுள்ள 14 வார்டுகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படவில்லை என்பதுதான் யதார்த்தமான உண்மை. நான் அந்த ஊரில் பிறந்தவன். எனவே, பாபநாசம் நதியுண்ணி அணையிலிருந்து, கோடரங்குளம் நதியுண்ணி அணையிலிருந்து நேரடியாக நீரை உறிஞ்சி அதற்குப் பிறகு, அம்பாசமுத்திரத்திலுள்ள 14 வார்டுகளுக்குத்தான் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, ஒரு பேரூராட்சியிலுள்ள 21 வார்டுகளில் 7 வார்டுகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிக்கொண்டிருக்கிறது. மீதி 14 வார்டுகளுக்கு நதியுண்ணி அணையிலிருந்து நேரடியாக மோட்டார் மூலம்தான் அந்தக் குடிநீரை வழங்கிக்கொண்டிருக்கிறது. காரணம், எனது ஊருக்கு அருகில் ஒரு கிலோமீட்டரில் நான் பிறந்த ஊருக்குப் பக்கத்தில்தான் அந்த மோட்டார் நீரேற்றும் நிலையமே இருக்கின்றது. இன்று வரை அங்கே உறை கிணறு அமைத்துக் குடிநீர் வழங்கப்படவில்லை. எனவே, எங்களுடைய பேரூராட்சிப் பகுதியிலுள்ள மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்று சொன்னால், அந்த வழியாக

உள்ள குடிநீர் பெரிய பெரிய குழாய்கள் அமைத்து செங்கோட்டை கூட்டுக் குடிநீர்த் திட்டம், தென்காசி கூட்டுக் குடிநீர்த் திட்டம், இன்னும் விருதுநகர், சங்கரன்கோயில், சேந்தமங்கலம் எல்லா பகுதிகளுக்குமே நமது தொகுதியிலிருந்துதான், அம்பாசமுத்திரம் பேரூராட்சியிலிருந்துதான் குடிநீர் செல்கின்ற வேளையில், நமக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் இன்று வரை கிடைக்கவில்லையே என்று அந்த 14 வார்டு மக்கள் ஏங்குகிறார்கள். அந்த 14 வார்டு மக்களுக்குக் கோடைக்காலங்களில் தாமிரபரணி ஆற்றில் தண்ணீர் வராத நேரத்தில், சகதியான தண்ணீர்தான் கிடைத்துக் கொண்டிருக்கிறது. எனவே அருள்கூர்ந்து என்னுடைய இந்தக் கேள்வியிலுள்ள உண்மை நிலையைப் புரிந்து, அந்த 14 வார்டுகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சக்திவேல் முருகன் அவர்கள் அம்பாசமுத்திரம் பேரூராட்சியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், 14 வார்டுகளுக்குத் தேவை என்பதை இங்கே வலியுறுத்தினார்கள். அம்பாசமுத்திரம் பேரூராட்சியில் மொத்தமாக 21 வார்டுகள் இருக்கின்றன. இதில் 14 வார்டுகளுக்குத் அவர் குறிப்பிட்டதைப் போல கோடரங்குளம் குடிநீர்த் திட்டத்தின் மூலம் தாமிரபரணி நதியில் இயல்பு நீரேற்றும் நிலையம் மூலமாக அங்கே 16 இலட்சம் லிட்டர் நீர் எடுக்கப்பட்டு, chlorination போன்ற சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்து, சுத்திகரிக்கப்பட்டு முழுமையாக அந்த 14 வார்டுகளுக்கும் தொடர்ந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் தமிழக அரசு, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் அரசு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சக்திவேல் முருகன்.

திரு. எம். சக்திவேல் முருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊர்க்காட்டிலே உறை கிணறு அமைத்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது,

2003 மே 5]

நீங்களே சொன்னீர்கள், நதியுண்ணி அணையிலிருந்து நேரடியாகத்தான் நீரை எடுத்துக்கொண்டு வருகிறீர்கள் என்று. ஆனால் கோடைக் காலங்களில் அணையில் தண்ணீர் இல்லாத நேரத்தில் அங்கே நீர் உறிஞ்சுவதற்குக்கூட அந்த அணையிலே தண்ணீர் இல்லாத நேரங்களில் நேரடியாக நீர் உறியும்போது எப்படிப்பட்ட நீர் வரும் என்பது உங்களுக்கு நன்கு தெரியும். சுத்திகரிப்பு நிலையம் இருக்கின்றது, நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் அது முழு நேரமும் இயங்க முடியாத ஒரு சூழ்நிலையில் இருக்கின்றது. அது பேரூராட்சி மக்களுடைய ஒரு யதார்த்தமான கோரிக்கை; எனவேதான் (மணியடிக்கப்பெற்றது) தாங்கள் மறுபரிசீலனை செய்து பாதுகாக்கப்பட்ட குடிநீரை, ஊர்க்காட்டிலேயோ அல்லது அதே இடத்திலேயோ உறை கிணறு அமைத்து, உறை கிணறு மூலமாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் எங்களுடைய அம்பாசமுத்திரம் பேரூராட்சியிலுள்ள 11 வார்டுகளுக்கும் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா, மறுபரிசீலனை செய்வார்களா, என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் பேரூராட்சியில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நீர் குறைவான சமயத்தில், வற்றிய நேரத்தில் நீர் உறிஞ்சப்படும்போது, அந்த நீர் சகதி கலந்த நீராக வர வாய்ப்பு உள்ளது என்பதைத் தெரிவித்தார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு filtration, சுத்திகரிக்கப்பட்டு முழுமையாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தொடர்ந்து வழங்கப்படும் என்பதைத் தெரிவித்து, தற்போது மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேலும் 2 உறை கிணறுகள் ஊர்க்காடு குடிநீர்த் திட்டத்தில் கூடுதலாக அமைக்கும் திட்டம் பூர்வாங்க ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் *387*, திரு. ராதாரவி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.